மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (05.08.2025) தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், ரூ.62.60 இலட்சம் செலவில் உட்கட்டமைப்பு மற்றும் உபகரணங்களை மருத்துவ பயனாளிகளுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பல்மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீ.பிரேம்குமார் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள், செவிலியர்கள், மருத்துவ மாணவர்கள் கலந்து கொண்டனர்.

உப்பளத் தொழிலாளர்களுக்கான நிதியுதவித் திட்டம் விரிவாக்கப்படுமா?

கனிமொழி கருணாநிதி எம்.பி. கோரிக்கைக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக.6- உப்பளத் தொழிலாளர்களுக்கான நிதியுதவித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும் என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி மக்களவையில் கோரிக்கை வைத்துள்ளார்.

இது தொடர்பாக ஆகஸ்டு 5 ஆம் தேதி அவர் சில கேள்விகளை எழுப்பினார்.

"இந்தியாவில் இருக்கிற உப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் உள்ள உப்பளத் தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

கடந்த ஐந்து ஆண்டுகளில் உப்பள தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனடைந்தவர்களின் எண்ணிக்கை மாநில மற்றும் ஆண்டு வாரியாக எவ்வளவு?

கல்விச் செலவுகள் மற்றும் பணவீக்கம் அதிகரித்து வருவதால், மேற்கூறிய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியுதவியின் அளவை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் ஏதேனும் மதிப்பாய்வு செய்திருக்கிறதா?

அப்படியானால், மானியத் தொகையை அதிகரிக்க அல்லது திட்டத்தின் எல்லையை விரிவுபடுத்த ஏதேனும் ஆலோசனைகள் அரசிடம் உள்ளதா? இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன? " என்று கனிமொழி கருணாநிதி எம்பி. கேள்விகள் கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு ஒன்றிய தொழில் மற்றும் வர்த்தகத் துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த பதிலில்,

"இந்தியாவில் ஆந்திரா, மேற்கு வங்காளம், ஒடிசா, தமிழ்நாடு, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, கர்நாடகா ஆகிய எட்டு மாநிலங்கள் உப்பு உற்பத்தி மாநிலங்களாக இருக்கின்றன.

இந்த மாநிலங்களில் உத்தேசமாக மதிப்பிடப்பட்டபடி குஜராத் மாநிலத்தில் 20 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்கள், தமிழ் நாட்டில் 15 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்கள், ராஜஸ்தானில் 15 ஆயிரம் உப்பளத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆந்திராவில் 5500 உப்பளத் தொழிலாளர்களும் மற்ற மாநிலங்களில் 2 ஆயிரம் அதற்கும் குறைவான எண்ணிக்கையில் இருக்கிறார்கள்.

Grant of Rewards to the Children of Salt Labourers என்கிற 'உப்பளத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வெகுமதிகள் வழங்கும்' திட்டத்தின் கீழ், உதவிகள் செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் மூலமாக மேற்கண்ட உப்பு உற்பத்தி செய்கிற எட்டு மாநிலங்களிலும் 2021-22 நிதியாண்டில் 2009 பேர், 2022-23 நிதியாண்டில் 1657 பேர், 2023-24 நிதியாண்டில் 1896 பேர், 2024-25 இல் 1573 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள்.

குறிப்பாக 15 ஆயிரத்து 500 உப்பளத் தொழிலாளர்களைப் பெற்றுள்ள தமிழ் நாட்டில் இத்திட்டத்தின் கீழ் 2021-22 இல் 290 பேரும், 2022-23 இல் 373 பேரும், 2023-24 இல் 623 பேரும், 2024-25 நிதியாண்டில் 438 பேரும் என உப்பளத் தொழிலாளர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிதியின் அளவு பற்றிய மதிப்பாய்வு ஏதும் அரசால் செய்யப்படவில்லை. அதனால், உப்பளத் தொழிலாளர்களுக்கு உதவும் திட்டம் விரிவு படுத்தும் திட்டம் இல்லை" என்று ஒன்றிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சென்னை கிழக்கு மாவட்ட

கழக நிர்வாகிகள், பகுதிக் கழக செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம்!

மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

சென்னை, ஆக.6- சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 05/08/25, செவ்வாய்கிழமை, மாலை 6.30 மணியளவில் சென்னை, ஒட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலை, எம்.கே.டி.மஹாலில், அவைத்தலைவர் கோ.ஏகப்பன் அவர்களின் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம் கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், பரிதிஇளம்சுருதி, வரதன், வே.உமாகாந்தன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, கவிஞர் நன்மாறன். மாவட்ட நிர்வாகிகள்: ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன், பகுதிக் கழக செயலாளர்கள்: கூ.பி.ஜெயின், வே.வாசு, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, ஐ.சி.எப்.வ.முரளி தரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தேர்தல் பார்வை யாளர்கள்: இரா.விடுதலை, என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன் பி.முனியாண்டி, பி.எம்.யாழினி, ஓ.ஏ.நாகலிங்கம். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலா தேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில்விஜய், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, L.P.F. மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலா ளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தீர்மானங்கள்

தீர்மானம் 1:

05/08/25 செவ்வாய்க்கிழமையான இன்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதி, மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட நான்கு தளங்கள் திறப்பு. 13/7/2025 அன்று எஸ்.ஆர்.பி கோவில் தெருவில் உள்ள தனியார் உடற்பயிற்சி கூடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பலமாக பாதிக்கப்பட்டு அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 42 வயதான சந்தோஷ் என்பவர் கொளத்தூர் தொகுதிக்கு சம்மந்தம் இல்லாதவராக இருந்தாலும் அவருடைய முழு மருத்துவ செலவையும் ஏற்றும், அந்த தீவிபத்தில் பாதிக்கப்பட்ட 3 நபர்களை சந்தித்து சேதம் அடைந்த அவர்களது 2 சக்கர வாகனத்திற்கு பதிலாக, புதிய இருசக்கர வாகனம் வழங்கியும்,

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்ட BLA 2, BDA, BYO ஆகியோர்க்கு சிறப்பு செய்தல். சிவ இளங்கோ சாலையில் காவல்துறை துணை ஆணையர் அலுவலகத்திற்காக புதிய கட்டடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டல் என பல்வேறு பணி களுக்காக வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.

தீர்மானம் 2:

பேரறிஞர் பெருந்தகை அண்ணா உருவாக்கிய திராவிட முன்னேற்றக் கழகத்தையும், அவர் கட்டமைத்த ஆட்சியையும் கட்டிக்காத்து, அரை நூற்றாண்டு காலம் இந்த இயக்கத்திற்குத் தலைமை தாங்கி, 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 19 ஆண்டுகாலம் சிறப்பான நிர்வாகத்தை அளித்து, நவீனத் தமிழ்நாட்டைக் கட்டி எழுப்பிய சிற்பியான நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நம் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வங்கக் கடலோரம் இதயத்தை இரவலாக தந்த பேரறிஞர் அண்ணாவோடு நிரந்தர ஓய்வு கொள்ளும் முத்தமிழ றிஞர் நினைவிடம் நோக்கி நடைபெறும் சரியாக காலை 7 மணியளவில் நடைபெறும் அமைதிப் பேரணியில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு வீர வணக்கம் செலுத்துவதென்றும்.

மேலும் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 83 வட்டங்களிலும் முத்தமிழறிஞர் நினைவை போற்றும் வகையில் அவர் தம் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி நலத்திட்ட உதவிகள் வழங்க முடிவெடுத்தும் இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

ராஜா அன்பழகன் எம்.சி. ஆலோசனை வழங்குகிறார்!

மயிலை மேற்குப் பகுதி இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

பகுதி அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் வேண்டுகோள்!

சென்னை, ஆக 6- மயிலை மேற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்ட மயிலை மேற்கு பகுதி இளைஞரணி ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவுறுத்தல்படி பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர் தினேஷ் மாணிக்கம் முன்னிலையில் இன்று 06082025 (புதன்கிழமை) மாலை 6 மணியளவில் 121 வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

மாவட்ட அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி., கலந்துகொண்டு ஆலோசனை வழங்குகிறார்கள்.

எனவே இக்கூட்டத்தில் பகுதி துணை அமைப்பாளர்கள் நீ.ஜெயக்குமார் , நா.உதயன், ஜே.ராஜேஷ் குமார், ஆர்.இளைய சூர்யா, ஆர்.அரவிந்த் ரமேஷ், கு.லோகேஷ் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி அமைப்பாளர் சீ.வி.திவான் குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

பொருள் : முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு பேரணி மற்றும் கழக ஆக்க பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாளை

முத்தமிழறிஞர் கலைஞரின் 7வது நினைவு நாள் அமைதிப் பேரணியில் தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்கங்கள் திரளாகப் பங்கேற்பீர்!

தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

சென்னை, ஆக.6- தொ.மு.ச.பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஐந்து முறை முதலமைச்சராக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து அகில இந்தியாவையே தமிழ்நாட்டை திரும்பிப் பார்க்க வைத்தவர், எழுத்தாளராக, கவிஞராக, இலக்கியவாதியாக, தலை சிறந்த நிர்வாகியாக, தமிழகத்தில் கடந்த 100 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் அதிக காலம் அரசியல் கட்சித் தலைவராகவும் தமிழகத்தை அதிக ஆண்டுகள் ஆண்ட பெருமைக்குரியவரும், ஏற்றுக் கொண்ட கொள்கைகளில் சமரசம் செய்து கொள்ளாமல் மானமுள்ள சுய மரியாதைக்காரராக வாழ்ந்தவரும்,இனமானம் - தன்மானம் - சுயமரியாதை மொழியுணர்வுகளை தமிழக மக்களின் உள்ளங்களிலும், உணர்வுகளிலும் நிலை நிறுத்திய வரும், வெற்றியையும், தோல்வியையும் சமமாகக் கருதி, தன் ஆளுமையை நிரூபித்தவரும், நவீன தமிழ்நாட்டின் சிற்பியுமான கடைகோடித் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவராக விளங்கிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7வது நினைவுநாளையொட்டி கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (ஆகஸ்ட் 7) காலை 7 மணி அளவில் சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் இருந்து அமைதிப் பேரணி புறப்பட்டு காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் தொ.மு.ச. பேரவை நிர்வாகிகள், மாவட்ட கவுன்சில் செயலாளர்கள், பேரவை செயற்குழு உறுப்பினர்கள், தொ.மு.ச. பேரவையில் இணைந்துள்ள இணைப்புச் சங்கங்களின் நிர்வாகிகள், போக்குவரத்துத் தொழிலாளர்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவினைப் போற்றி அஞ்சலி செலத்திட வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தஞ்சை ஏ.வி. பதி
ஆகஸ்ட் 6 (1996)

தஞ்சை மாவட்டக் கழக முன்னணித் தோழர்களில் ஒருவர். தஞ்சை நகர்மன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்தவர்.

கழகம் தொடங்கிய நாள் முதல் தன்னை முழுமையாக கழகப் பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் துவக்கப்பட்ட சீரணிப் படையில் தஞ்சை வட்டத் தலைவராக பொதுப்பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் – மன்னை ஆகியோருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

சென்னை

மாநகராட்சிப் பகுதிகளில்

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்!

இன்று 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

சென்னை, ஆக.6- பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று (06.08.2025) திருவொற்றியூர் மண்டலம், வார்டு-6ல் ராஜா சண்முகம் நகர், 4வது தெருவில் உள்ள சமூகநலக் கூடம், மாதவரம் மண்டலம், வார்டு-33ல் பாரதியார் தெருவில் உள்ள ஏழுமலை நாயக்கர் மண்டபம், அம்பத்தூர் மண்டலம், வார்டு-84ல் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு காலனி, கிரண் பேலஸ், அண்ணாநகர் மண்டலம், வார்டு-99ல் ராஜா அண்ணாமலை சாலையில் உள்ள தர்மபிரகாஷ் திருமண மண்டபம், வளசரவாக்கம் மண்டலம், வார்டு-153ல் போரூர், ஆறுமுகம் நகரில் உள்ள பி.ஜே.என்.மஹால், பெருங்குடி மண்டலம், வார்டு-185, திரௌபதி அம்மன் கோவில் தெருவில் உள்ள எஸ்.ஆர்.கே. மஹால் ஆகிய 6 வார்டுகளில் நடைபெறவுள்ளது.

இந்த முகாம்கள் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெறும். பொது மக்கள் தங்கள் வார்டுகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பங்கேற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்
ஆகஸ்ட் 6 (2019)

தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

"தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.